முச்சந்தி முரளி



"இனி எலக்சன் வரைக்கும் எல்லா இடமும் அபிவிருத்தி ஆறு தான் பெருக்கெடுக்கப்போகுது பாருங்கோ"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 251

சனிக்கிழமை
03 ஓகஸ்ட் 2024

ஆடி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## 6ஆம் திகதியன்று நாடாளுமன்று கூடும்

கொழும்பு, ஓக. 3

நாடாளுமன்றம் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை கூடவுள்ளதாக நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் இடம்பெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)



## 300,000 மக்களுக்கு குடிதண்ணீர் வசதி!

யாழ்ப்பாணம், ஓக. 3

தாளையடியில் அமைக்கப்பட்டுள்ள கடல்நீரை நன்னீர் ஆக்கும் திட்டத்தின் மூலம் 3 இலட்சம் மக்களுக்கு பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 09

## விபத்தில் ஒருவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 3

மன்னார் - இலுப்பைக் கடவைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 09

## மோ.சைக்கிள் மோதி முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 3

யாழ்ப்பாணம் - நுணாவில் சந்திப் பகுதியில் இடம்பெற்ற 09

ஐந்தே ஆண்டுகளில்

# வடமாகாணத்தில் முழு அபிவிருத்தி!

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 3**

**வடக்கில் உள்நாட்டுப் போர் நிறைவடைந்துவிட்டது. தற்போது அனைவரும் ஒன்றிணைந்து அபிவிருத்திப் போரை ஆரம்பிக்க வேண்டும். எதிர்வரும் 5 தொடக்கம் 10 வருடங்களில் வடக்கை அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்றுவதே எனது நோக்கம் என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.** 11

காங்கேசன்துறை

## துறைமுக அபிவிருத்திக்கு இந்தியாவுடன் பேச்சுகள்!

யாழ்ப்பாணம், ஓக. 3

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி தொடர்பில், இலங்கைக்கும் - இந்தியாவுக்கும் இடையில் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று 11

## கஞ்சாவுடன் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 3

யாழ்ப்பாணம் - செம்மணிப் பகுதியில் பெருமளவு கஞ்சாவுடன் 11

## ஜனாதிபதி வேட்பாளர் ரணில் மட்டும்தான்!



### ரவி கருணாநாயக்க ஆணித்தரம்

யாழ்ப்பாணம், ஓக. 3

ஜனாதிபதித் தேர்தலில் எத்தனை வேட்பாளர்கள் போட்டியிட்டாலும், எங்களுக்குத் தெரிவது ஒரேயொரு வேட்பாளர் தான். அது ரணில் மட்டும்தான் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட ரவி கருணாநாயக்க 'உதயன்' அலுவலகத்தில் 11

## அத்தியாவசிய பொருள்களின் விலை குறைப்பு!

கொழும்பு, ஓக. 3

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் சிலவற்றின் விலைகளை நேற்று வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது. இதற்கமைய, 11

## வேலைவாய்ப்புக்கு சாதகமான நிலை!

### இளைஞர்களிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 3

இளைஞர்களுக்குத் தொழில் வழங்கும் வேலைத்திட்டம் அடுத்த வருடம் முதல் ஆரம்பிக்கப்படும் எனவும், அதற்காக அரச மற்றும் தனியார் துறைகளில் புதிய 09

## அனைத்து இலங்கையர்களும் ஏற்கின்ற தீர்வு வழங்கப்படும்!

இனப்பிரச்சினை தொடர்பில் ரணிலின் நிலைப்பாடு இது

விரிவு :- பக். 11

## மாவிட்டபுரம் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா!

யாழ்ப்பாணம், ஓக. 3

'அபிஷேகக் கந்தன்' எனப் போற்றிச் சிறப்பிக்கப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயக் காம்யோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. 11

## மயங்கிய இலங்கை மீனவரை காப்பற்றிய நாகை மீனவர்கள்

சென்னை, ஓக. 3

நடுக்கடலில் நோய்வாய்ப்பட்டு மயங்கிய நிலையில் இருந்த இலங்கை மீனவரை தமிழகம் நாகை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் காப்பாற்றிக் கரைசேர்த்ததுடன், மருத்துவ உதவிகளையும் வழங்கியுள்ளனர். திருகோணமலையைச் சேர்ந்த அகமது இர்பான் என்ற மீனவரே தமிழக மீனவர்களால் இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரிடம் மேலதிக 11

## கடலுக்குள் மூழ்கியே இந்திய மீனவர் சாவு!

### உடற்கூற்று அறிக்கையில் தகவல்

யாழ்ப்பாணம், ஓக. 3

நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில், இந்திய மீனவர் ஒருவர் உயிரிழந்த நிலையில், அவர் தண்ணீருக்குள் மூழ்கியதாலேயே 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முன்னாயத்தம் நடவடிக்கைகள் மும்முரம்

## பலகட்டச் சந்திப்புகளில் தேர்தல்கள் ஆணைக்குழு

**கொழும்பு, ஓக. 3**
**எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக தேர்தல்கள் ஆணைக்குழு பல்வேறு தரப்புகளுடன் விசேட சந்திப்புகளை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

தேர்தல் செயன்முறையுடன் தொடர்புடைய ஏனைய தரப்புகளுடன் எதிர்வரும் நாள்களில் இந்தச் சந்திப்புகள் நடத்தப்படவுள்ளன.
இன்று மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள், பிரதி மற்றும் துணை தேர்தல்கள் ஆணையாளர்களுடன் சந்திப்பு நடத்தப்படவுள்ளது.
எதிர்வரும் 5 ஆம் திகதி ஊடக நிறுவனப் பிரதானிகளுடன் விசேட சந்திப்பு நடத்தப்படவுள்ளது.
எதிர்வரும் 6 ஆம் திகதி அமைச்சுகளின் செயலாளர்களுடன் விசேட சந்திப்பொன்று நடத்தப்படவுள்ளது. அதேவேளை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக மாகாணங்களின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மாஅதிபர்களும்கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

# வடக்கிலிருந்து ஜனாதிபதியை வென்றெடுப்பதே எமது ஆசை!

## காலத்துக்கேற்ப மாறும் பெரமுனக் கட்சி அழைப்பு

கொழும்பு, ஓக.3
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் வடக்கில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை வென்றெடுப்பதே எங்களின் இலக்காக இருக்கின்றது.
வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கு நம்பிக்கைகொண்ட இளைஞர்கள் வடக்கில் உருவாகியுள்ளனர்.
-இவ்வாறு நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் கூறுகையில்,
பொலிஸ், காணி அதிகாரங்களை நாம் எதிர்ப்பதால்தான் வடக்கில் உள்ள சில கட்சிகளால் எங்களுடன் இணைந்து செயற்படமுடியாதுள்ளது.
ஆனால் இன்றைய இளைஞர்கள் மத்தியில் மாற்றம் வந்துள்ளது
அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு பகிரப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம்.
வடக்கில் ஒன்றையும், தெற்கில் வேறொன்றையும் நாம் கூறவில்லை.
ஆனால்கல்வி, சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட விடயங்களில் நம்பிக்கை கொண்ட இளைஞர்கள் வடக்கில் உருவாகியுள்ளனர். நவீன உலகம் பற்றி அவர்கள் சிந்திக்கின்றனர். அவர்கள் எமது கட்சியுடன் நேரடியாக இணைகின்றனர். - என்றார். (ச-44)

# அஞ்சல்மூல வாக்களிப்பு சுற்றறிக்கை வெளியீடு!

கொழும்பு, ஓக. 3
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிக்கவிருப்போர் பின்பற்றவேண்டிய நடைமுறைகள் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள் ளது.
அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள், மாவட்டச் செயலாளர்கள், குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் உள்ளிட்ட அனைத்து மாவட்ட பிரதி, உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் இந்தச் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடந்த தேர்தல்களின் பின்னர் அஞ்சல் மூலம் வாக்களிப்பு தொடர்பில் தெரியவந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு இவ்வாண்டு தேர்தலில் அஞ்சல் மூல வாக்களிப்பு முறையில் சில நிபந்தனைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

# மக்கள் போராட்ட முன்னணி தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

கொழும்பு, ஓக. 3
ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் போராட்ட முன்னணி சார்பில் போட்டியிடும் 'அரகலய' செயற்பாட்டாளர் சட்டத்தரணி நுவான் போபகே தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ளார்.
புதிய அரசமைப்பை உருவாக்குவதே தமது நோக்கம் என தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நுவான் போபகே தெரிவித்துள்ளார். நுவான் போபகேக்கு ஆதரவாக சட்டத்தரணிகள் குழாம் ஒன்று அவருடன் இணைந்துள்ளது. (ச-22,6)

# பெரும்பான்மைப் பலம் ஜனாதிபதியின் வசம்!

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 3
பரந்துபட்ட அரசியல் கூட்டணியின் சுயாதீன வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் ஜனாதிபதி வசமாகிவிட்டது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நெருக்கடியான சூழ்நிலையின் போது நாட்டுக்காக சிறந்த தீர்மானத்தை எடுத்துள்ளார். 2022 ஆம் ஆண்டு இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரம சிங்கவை தெரிவு செய்வதற்கு அவர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்.
பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கண்டு நாட்டு மக்களைப் பாதுகாத்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு இப்போது ஆதரவு வழங்கப் போவதில்லை என்று பொதுஜன பெரமுன எடுத்த தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது. கட்சிக்கு முன்னுரிமை வழங்குவதை விட நாட்டுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் - என்றார். (ச-இ)

# பிரிவோர் வருவர்

கொழும்பு, ஓக. 3
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி உறுப்பினர்களில் சிலர் மீண்டும் கட்சிக்குத் திரும்புவார்கள் என்று மொட்டுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.
தனிவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கு எமது கட்சி முடிவெடுத்துவிட்டது. இந்த முடிவு மாறாது. எமது வேட்பாளர் விரைவில் பெயரிடப்படுவார்.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியுள்ள உறுப்பினர்கள் சிலர் மீள வரக்கூடும். கட்சி செயலாளரை மாற்றுவதற்கென நடைமுறை உள்ளது. மாவட்டக் கூட்டங்களில் அதனைச் செய்ய முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# சாகரவை நீக்குங்கள்

கொழும்பு, ஓக. 3
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசத்தை நீக்கவேண்டும் என்று அந்தக் கட்சியின் மாத்தறை மாவட்ட கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
புதிய பொதுச்செயலாளராக அமைச்சர் ரமேஷ் பத்திரண நியமிக்கப்பட வேண்டும் எனவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.
அத்துடன் மீளப்பெறப்படவேண்டும் எனவும், ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ச-44)



# முடிவில் மாற்றமில்லை

## மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 3
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வது தொடர்பில், சிறிலங்கா பொதுஜனபெரமுன எடுத்திருக்கும்தீர்மானத்தில் தாம் உறுதியாக உள்ளதாக கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அதேவேளை கட்சி எடுத்த முடிவை தன்னால் மாற்ற முடியாது எனக்கூறி ஜனாதிபதி ரணில் விடுத்த கோரிக்கையை மஹிந்த ராஜபக்ச நிராகரித்துவிட்டார் என்றும் தெரியவருகின்றது (ச)



# பிரிந்தது ரணிலே!

கொழும்பு, ஓக. 3
எமது கட்சியுடன் இணைந்து பயணிப்பதற்கு இருந்த வாய்ப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே தூக்கியெறிந்துள்ளார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.
பொதுஜன பெரமுனக் கட்சியினரும், ஜனாதிபதியும் இணைந்தே புதிய ஆட்சியை உருவாக்கினர். ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்பிறகு அவர் ஜனாதிபதிப் பதவிக்கு வருவதற்கும் எமது கட்சியால் நேசக்கரம் நீட்டப்பட்டது. ஆனால் இறுதி முடிவுக்கு வருவதற்குள் எமது கட்சியில் இருந்து ஒரு பிரிவினரை எடுத்துவிட்டார். பேச்சுகள் நிறுத்தப்பட்டன. நாமும் ஒரு வேட்பாளரை நிறுத்தும் முடிவை எடுத்தோம் என்றும் அவர் தெரிவித்தார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கில் பதற்றம் அச்சம் தேவையில்லை!



அலி சப்ரி தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 3**

**மத்திய கிழக்கில் நிலவும் பதற்ற நிலை தொடர்ந்தால் அதனை எதிர்கொள்வது தொடர்பில் முன்கூட்டிய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலை நோக்குப் பார்வையால்தான் இலங்கை இன்னொரு வெனிசுலாவாக மாறாமல் பொருளாதார ரீதியில் ஸ்திரமான நிலைக்கு கொண்டுவர முடிந்தது.

கட்சி அரசியலை புறந்தள்ளிவிட்டு நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிப்பது அனைவரினதும் பொறுப்பாகும். ஒரு நாடாக நாம் மிகவும் கடினமான சூழ்நிலையிலிருந்து ஓரளவு ஸ்திரத்தன்மைக்கு வந்துள்ளோம். ஒரு சிறிய அசைவு உங்களை மீண்டும் படுகுழியில் விழச் செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## நிகழ்நிலைக்காப்பு சட்டத்தில் திருத்தம்

வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஓக. 3

பிரதான ஊடகங்கள் மற்றும் சமூகவலைத்தளங்களை இலக்கு வைத்து நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்நிலைக் காப்புச்சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அரச வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் உத்தரவுக்கமைய இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடி உரிய திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இது தொடர்பான திருத்தங்கள் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அவர் மேலும் கூறியுள்ளார். (ச-இ)

கிளிநொச்சியில்

## மணல் அகழ்வு 13 பேர் கைது!

கிளிநொச்சி, ஓக. 3

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பணங்கண்டி, முரசுமோட்டை, பரந்தன் ஆகிய பகுதிகளில் இருந்து அனுமதிப் பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் ஏற்றிச் சென்ற 13 பேர் கிளிநொச்சி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தச் சட்டவிரோத மணல கழ்வு முறியடிக்கப்பட்டது.

இதன்போது 3 உழவு இயந்திரங்கள் 11 டிப்பர்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கெதிராக வழக்குப் பதிவு செய்து சான்றுப்பொருள்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி)

## வயநாடு நிலச்சரிவு 2 இலங்கையர் சாவு!

கேரள மாநிலம் வயநாடு பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி இலங்கையர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வந்த கன மழை காரணமாக வயநாடு பகுதியில் அடுத்தடுத்து மண்சரிவு ஏற்பட்டு 295 க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த மண்சரிவில் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளதுடன், மேலும் பலர் காணாமற் போயுள்ளதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

## நிறுத்தல், அளத்தல் உபகரணங்களுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஓக. 3

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவுக்குட்பட்ட சகல வர்த்தகர்களினதும் (ப.நோ.கூ.சங்கங்கள், சந்தை வியாபாரிகள் உட்பட) நிறுக்கும், அளக்கும் உபகரணங்கள் சரிபார்த்தல் மற்றும் முத்திரை பதித்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 12, 13ஆம் திகதிகளில் மல்லாகத்திலுள்ள வலி. வடக்கு பிரதேசசபை உப அலுவலகத்திலும் எதிர்வரும் 14 ஆம் திகதி மயிலிட்டி கிராமக்கோட்டடியிலுள்ள வலி. வடக்கு பிரதேசசபை உப அலுவலகத்திலும் எதிர்வரும் 15. 16. 17 ஆம் திகதிகளில் தெல்லிப்பழை உபஅலுவலகத்திலும் இந்தப் பணி இடம் பெறும். எனவே இந்தச் சேவையில் அனைத்து வர்த்தகர்களையும்கலந்துகொண்டு தமது நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடுமாறு சபையின் செயலாளர் சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் அறிவித்துள்ளார். (ச)

## மூவர்ணங்களில் இனி கடவுச்சீட்டு



இலங்கையில் மூன்று நிறங்களில் கடவுச்சீட்டு விநியோகிக்கப்படவுள் ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் புதிய அம்சங்களுடன் கூடிய கடவுச்சீட்டுகள் அறிமுகம் செய்யப்படவுள்ளன. அதன்படி சாதாரண, உத்தியோகபூர்வ மற்றும் இராஜதந்திரிகளுக்கு என மூன்று வெவ்வேறு நிறங்களில் வழங்கப்படும். இதேவேளை ஈ கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளமையினால் அடுத்த இரண்டு மாதங்களுக்கு கடவுச்சீட்டு வழங்குவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவசர பயணத் தேவைகளைக் கொண்ட நபர்களுக்கு கடவுச்சீட்டுகளை வழங்க குடிவரவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## புதினம் தெரியுமோ?

**ஊர் ரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம், கடல் ரண்டு பட்டால் நேவிக்கு கொண்டாட்டமாம். அப்பதானே எங்களையும், தமிழகக்காரரையும் கீரியும் பாம்பும் மாதிரி சண்டைபிடிக்க வைக்கலாம். எங்களுக்கு ஒண்டெண்டால் அமெரிக்காவோ, சீனாவோ, இந்திய மத்திய அரசாங்கமோ வரப்போறேலை. ஆனால் எப்பவும், என்ன பிரச்சினை வந்தாலும் எங்களுக்காக தமிழகம் வந்தே தீரும். அதாலதான் செங்கொடி, முத்துக்குமரன் எண்டு இளம் குருத்துகள் எங்கட பிரச்சினையைத் தீர்க்க வேணும் எண்டு சொல்லி தீக்குளிச்சு தியாகமெல்லாம் செய்தவை. அதெல்லாம் சிங்கள அரசாங்கத்துக்கு புகைச்சலா இருந்திருக்கும். இனியும் அப்பிடி எங்களுக்காக தமிழகக்காரர் வந்திடக் கூடாதெண்டுதான் உந்த மீனவர் பிரச்சினையை வைச்சு ஒரு கொளுவல் போட்டு, பிரிக்கப் பாக்கினம்.**

**உண்மையில இந்த மீனவர் பிரச்சினையை ரண்டு நாட்டு நேவிக்காரரும் நினைச்சால் எப்பவோ சுமுகமா நிப்பாட்டி இருக்கலாம். ரண்டு நாட்டுக் கடல் எல்லையிலையும் கண்காணிப்பை கூட்டி, எல்லாப் படகுகளுக்கும் ஜி.பி. எஸ் பூட்டி அதுகள் எங்க போய் வருகுதெண்டு பார்த்தாலே இப்பிடி எல்லை மீற ஏலாது. ஆனால் அதுகளைச் செய்யமாட்டினம். ரண்டு தரப்பு மீனவரையும் அடிபட விட்டுட்டு கூத்துப் பாக்கிறதுக்குத்தான் உவையள் ஆவலா நிக்கினம். இப்பிடிக் கூத்துப்பாக்க நினைச்சு அண்டைக்கு இந்திய மீனவரைப் பிடிக்கப் போகேக்க, தற்செயலா படகின்ர கேபிளுக்கு நடுவில சிக்கி நேவி ஒராள் செத்தது. அதுக்குப் பழிவாங்கிறதுக்காக நேவிக்காரர் அதுக்குப் பிறகு ஓடித் திரிஞ்சவை. ஆனால் நேவியின்ர குணம் தமிழக மீனவருக்குத் தெரிஞ்சதாலயோ என்னவோ, கொஞ்சநாளா அவை எல்லை தாண்டாமல் தங்கட இடத்தோடையே நிண்டிட்டினம். அதால நேவிக்காரர் பழிவாங்க முடியாம தவிச்சுப் போட்டினம். முந்தநாள் விடியப்பிறம், கச்சதீவுக்கு கிட்ட இந்தியப் படகுகளைக் கண்டிட்டு, நேவிக்காரர் தங்கட பழியைத் தீர்க்க ரெடியா இருந்திருக்கினம். ஆனால் தமிழகக்காரர் இஞ்சாலிப் பக்கம் வரவேயில்லை. தங்கட கடலுக்கையே அவை நிண்டிருக்கினம்.**

**என்ன செய்யிறதெண்டு கனநேரமா கையைப் பிசைஞ்சு கொண்டு நிண்ட நேவிக்காரர், ஏலாக் கட்டத்துக்க இந்திய எல்லைக்குள்ள ரண்டு மூண்டு மைல் உள்ளுக்க போய், மீனவரோட கொளுவியிருக்கினம். போன வேகத்தில தங்கட படகால தமிழக மீனவரின்ர மரப்படகோட மோத, அது பிளந்து ரண்டு பேர் கடலுக்குள்ள விழ, மிச்சப்பேர் ஓடிட்டினம். கடலுக்க விழுந்த ரண்டு பேரும் தண்ணிக்குள்ள கனநேரம் தத்தளிக்க, நேவிக்காரர் அவையைத் தாங்களும் காப்பாத்தாமல், வேற ஆரும் காப்பாத்தவும் வராமல் அதிலயே சுத்திக்கொண்டு நிண்டிருக்கினம். தத்தளிச்சவையில ஒராளை கொஞ்ச நேரத்தில காணேலை. மற்ற ஆளை நாப்பது நிமிசத்துக்குப் பிறகுதான் மேல தூக்கி இருக்கினம். அதுக்குள்ள அந்த மீனவர் செத்திட்டாராம். அதுக்குப் பிறகும் அந்த 'பொடியை' போஸ்மட்டம் உடன செய்யேலாதபடி நேவிக்காரர் பெரும் இழுத்தடிப்புச் செய்தவையாம். இப்பிடியெல்லாம் செய்தாவது எங்கட கடலை எரியப்பண்ணுறதுதன் நேவிக்காரரின்ர பிளான். அந்த சதிக்குள்ள நாங்கள் மாட்டுப்படாமல் இருந்தால் சரி.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிக்கல் நடுகை



யாழ்ப்பாணம், ஓக.3
சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியில் விளையாட்டு வீரர்களுக்கான சகல வசதிகளையும் கொண்ட புதிய ஓய்வு அறைக்கான அடிக்கல் நடுகை செய்யும் நிகழ்வு கல்லூரியின் அதிபர் தி.செவ்வஸ்தான் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினராக மாநகரசபை முன்னாள் பிரதி முதல்வரும், பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவருமான துரைராசா ஈசன் கலந்துகொண்டார். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 25 இலட்சம் ரூபாவில் இந்தப் பணி இடம்பெற்றது. (ச-25)



யாழ்.கோட்டைஸ்ரீ முனீஸ்வரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழாவின் இரத பவனி கடந்த செவ்வாய்க்கிழமை நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது. (ச-25, 66)

# இரு நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம் ஓக. 3
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா எழுதி இந்திய வெளிவிவகார அமைச்சின் அனுசரணையில் வெளிவரும் இரு நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச-66)



# கணிதம் கற்பித்தல்; கருத்துரைகள்

யாழ்ப்பாணம், ஓக. 3
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வாராந்தப் புதன்கிழமை ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த புதன்கிழமை கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் மூத்த எழுத்தாளர் நெடுந்தீவு மகேஷ் அதிதியாகக் கலந்து கொண்டு கணிதம் கற்பித்தல் தொடர்பான கருத்துரையை ஆற்றினார். ஆசிரிய மாணவன் இ.செந்தூர்ச் செல்வன் நெடுந்தீவு மகேஷ் எழுதிய தாரணி ஒரு ஆச்சரியக் குறி எனும் நூல் பற்றிய நயப்புரையை நிகழ்த்தினார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் நிறைவுரை ஆற்றினார். மூத்த எழுத்தாளர் நெடுந்தீவு மகேஷ் கலாசாலைச் சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார். (ச-66)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக. 3
'ஏழாலை' எனும் பெயர் உருவாகக் காரணமான ஏழு ஆலயங்களில் ஒன்றான ஏழாலை புங்கடி புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ள ஆலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் சப்பரத் திருவிழாவும், 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும், ஆடிப்பூரத் தினமான 7 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுமென ஆலய நிர்வாகசபையினர் தெரிவித்துள்ளனர். (ச-66)



# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.3
நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவ கால ஏற்பாடுகள் தொடர்பாக வீதித்தடைக்குள் வதியும் பொதுமக்களுடனான கலந்துரையாடல் யாழ். மாநகரசபை சுகாதார மருத்துவ பணிமனையில் இன்று சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. அந்தப்பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவரையும் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு மாநகர சபை அறிவித்துள்ளது. (ச-25)

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** காரிய அனுகூலமான நாள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப் பதில் தாமதம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் வீண் செலவுகளும் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.



**இடபம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். காரியங்கள் ஆதாயம் தருவதாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.



**மிதுனம்:** சிந்தித்து செயற்படவேண்டிய நாள். தாய்வழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது. பொறுமை அவசியம்.



**கடகம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். இளைய சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.



**சிம்மம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். சங்கடங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும். பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு ஏற்படும்.



**கன்னி:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பாராத வேலைச்சுமையின் காரணமாக சற்று சோர்வு உண்டாகும். காரியம் சாதகமாக முடியும். விநாயகரை வழிபடுவது நன்று.



**துலாம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பக்குவமாகச் சமாளித்து விடுவீர்கள்.



**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சல் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.



**தனுசு:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் உதவிகரமாக இருப்பார்கள். ஆதாயம் உண்டாகும். இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும். ஆஞ்சநேயர் வழிபாடு நலம் சேர்க்கும்.



**மகரம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவாக இருப்பார். வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போல் இருக்கும். செலவுகள் அதிகரிக்கும்.



**கும்பம்:** பணவரவு உண்டு. செயல்களும் அனுகூலமாக முடியும். புதிய முயற்சியில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சங்கடங்கள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகும்.



**மீனம்:** அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு குறையும். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

# நல்லூர்த் திருவிழா வெளிவீதி பஜனை

யாழ்ப்பாணம், ஓக. 3
நல்லூர் கந்தப்பெருமான் மஹோற்சவ காலத்தில் மாணவர்களிடையே ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் இறைபக்தியை அதிகரிக்கும் முகமாகவும் நடத்தப்படுகின்ற பஜனை நிகழ்வு வழமை போல இவ்வருடமும் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில், ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளின் வழிகாட்டலில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி கொடியேற்றத் திருவிழாவில் இருந்து செப்ரெம்பர் 02ஆம் திகதி கொடியிறக்கத் திருவிழா வரை முருகப்பெருமான் மாலையில் வெளிவீதிவலம் வரும்போது தினமும் பஜனை நடைபெறவுள்ளது. பஜனையில் பங்குபற்ற விரும்புகின்ற பாடசாலைகளும் (அதிபர்/பொறுப்பாசிரியர்/ சைவசமய ஆசிரியர்/சங்கீத ஆசிரியர்/ஆசிரியர்/அறநெறி ஆசிரியர்) ஆன்மீக, சமய நிறுவனங்களும் மேலதிக விவரங்களைப் பெற விரும்புகின்ற ஆர்வலர்களும் 077 222 0103 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-105,27,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கடற்பதற்றம் கவனம்...!

வடக்குக் கடற்பரப்பில் மிகப்பெரியதொரு கடற்பதற்றம் ஏற்பட்டிருக்கின்றது. நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்களைக் கைதுசெய்ய முற்பட்டபோது, இலங்கைக் கடற்படையினரின் படகும் தமிழக மீனவர்களின் படகும் மோதி ஏற்பட்ட விபத்தில், தமிழக மீனவரான மலைச்சாமி என்பவர் உயிரிழந்ததையடுத்தே இந்தப் பதற்றநிலை வடக்குக் கடற்பரப்பை இறுகப்பற்றியிருக்கின்றது. வடக்குக் கடற்பரப்பு பாதுகாப்பற்ற பிராந்தியமாக மாற்றம் பெற்றுப் பலகாலம். 2009ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மௌனித்த பின்னர் தமிழர் தாயகத்துக்குள் ஆபத்தான போதைப்பொருள்கள் ஊடுருவும் பகுதியாகவும், மீனவக் குடும்பங்கள் மீது பொருளாதாரப் படுகொலைகளைக் கட்டவிழ்த்து விடும் பகுதியாகவும்தான் வடக்குக் கடற்பரப்புக் காணப்படுகின்றது.

30 ஆண்டு காலமாக போர் தின்றுதீர்த்த வடக்கு மாகாண மீனவர்களின் பொருளாதாரம் போரின் பின்னரே மெல்லத் தலைதூக்க எத்தனித்தது. ஆனால், தற்போது அந்தச் சிறுபொருளாதார ஈட்டுகைக்கான வாய்ப்புகளையும் இல்லாது செய்வதில் தமிழக மீனவர்கள் அத்தனை ஆர்வமுள்ளவர்களாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். பலநாள் தங்கியிருந்து மீன்பிடிக்கக்கூடிய படகுகளில், தடைசெய்யப்பட்ட இழுவைமடிகளைப் பயன்படுத்தி அவர்கள் மேற்கொள்ளும் 'மீன் வேட்டையால்' நாளுக்கு நாள் ஈழத்தமிழர்களின் வாழ்வாதாரமும் பொருளாதாரமும் நலிந்தும் -அழிந்தும் செல்கின்றன. இந்தக் 'கடல் மோதல்' அவ்வப்போது மனித உயிர்களையும் குடிப்பதுண்டு. அதன் தொடர்ச்சிதான் மீனவர் மலைச்சாமியின் இறப்பு.

தமிழக மீனவர்களுக்கும், ஈழ மீனவர்களுக்கும் இடையிலான கடற்பதற்றம் என்பது 'தீர்க்கப்பட முடியாத காஷ்மீர்' பிரச்சினையல்ல. இந்திய - இலங்கை அரசாங்கங்கள் நினைத்திருந்தால் இது என்றோ இறந்து புதைந்து போயிருக்கவேண்டிய பிரச்சினையே. ஆனால், இந்தப் பிரச்சினையை உயிர்ப்புடன் வைத்திருக்கவேண்டிய தேவை இந்த இரண்டு அரசாங்கங்களுக்கும் இருக்கவே செய்கின்றது. ஈழத்தமிழனும், சோழத்(தமிழக) தமிழனும் ஒரு தரப்பினரின் மீது இன்னொரு தரப்பினர் வன்மத்தை வளர்த்துக் கொள்வது பிராந்திய அரசாங்கங்களுக்குத் தவிர்க்கப்பட முடியாததாகவும், அரசாங்கங் களின் இருப்பைப் பாதுகாத்துக்கொள்ள அவசியமானதாகவும் காணப்படுகின்றது. அத்துமீறிய மீன்பிடியை முற்றாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இரு அரசாங்கங்களும் பிடிப்பற்று இருப்பதற்குரிய பின்புலம் இதுதான். இவ்வாறானதொரு பின்னணியில், இந்த விடயத்தில் ஈழத்தமிழர்களும், சோழத்தமிழர்களும் உச்சக்கட்டப் புரிதலுடனும் பொறுப்புணர்வுடனும் நடந்துகொள்ள வேண்டியது காலத்தின் தேவையே.

இலங்கையில் போர் மேகம் உச்சமாகக் கருக்கூட்டியிருந்தபோது, இங்குள்ள பல்லாயிரம் மக்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்ளாதவாறு பாதுகாத்து அரணாக நின்றவர்கள் தமிழக மீனவர்கள். அவர்கள் கொண்டுவந்து சேர்த்த உணவுப்பொருள்களும், அத்தியாவசியப் பொருள்களும் ஏராளம். தமிழக மீனவர்களுக்கும், ஈழத்தமிழ் மீனவர்களுக்கும் இடையிலான உறவென்பது வார்த்தைகளால் எழுதிவிட முடியாதது.

ஆனால், தாயும் பிள்ளையுமாக இருந்தாலும்கூட வாயும் வயிறும் வேறு என்பார்கள். அதைத் தமிழக மீனவர்கள் புரிந்து நடக்கும் போதுதான், போர் தின்ற இந்தப் பூமியின் பொருளாதார ஈட்டுகை கொஞ்சமாவது துளிர்க்கும்.



# மீள ஆரம்பிக்கப்பட்டன அபிவிருத்தித் திட்டங்கள்

## அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 3**

**கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த 171 திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
இவற்றில் 58 வேலைத்திட்டங்களை இந்த வருடமும் அடுத்த வருடமும் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.
குடிதண்ணீர், சுகாதாரம் மற்றும் கல்வி, வீதிகள் போன்ற துறைகள் தொடர்பான 58 திட்டங்கள் இந்த ஆண்டு நிறைவடையும். இந்த ஆண்டுக்குள் நிறைவேற்றப்படவேண்டிய அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் இலக்காகும். இது எதிர்வரும் ஆண்டுகளில் முன்மொழியப்பட்ட புதிய திட்டங்களை ஆரம்பிக்க அனுமதிக்கும். நாடு மறுவளர்ச்சிப் பாதையில் நுழைந்துள்ளது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு - என்றார். (ச)

# தோட்ட மக்களுக்கு நிரந்தர காணி உறுதி

கொழும்பு, ஓக. 3
பெருந்தோட்ட மக்களின் உண்மையான சமூகமயமாக்கலுக்காக நிரந்தர காணிஉறுதிப் பத்திரங்களை வழங்கும் வேலைத்திட்டம் தொடர்கிறது என பெருந்தோட்ட நிறுவன மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலா பிட்டிய தெரிவித்துள்ளார்.
சுமார் 200 வருட கால வரலாற்றைக் கொண்ட பெருந்தோட்ட மக்களே தமக்கான உரிமை இல்லாத காணிகளால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்திட்டத்தின் பிரகாரம் பெருந்தோட்ட மக்களுக்காக புதிய கிராமங்களை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தோட்ட மக்களை சமூகமயப்படுத்துவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் என்றும்அவர்மேலும்தெரிவித்தார். (ச)

# தடையின்றி எரிபொருள் விநியோகம்

எரிபொருள் விநியோகம் எதுவித தங்கு தடையுமின்றி நடைபெறுமென மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.
சகல விதமான எரிபொருள்களும் போதியளவு கையிருப்பிலுள்ளதாகவும், ஐ.ஓ.சி., சினோபெக், ஆர்.எம். பாரக்ஸ் போன்ற வெளிநாட்டு நிறுவனங்களுடான விநியோகமும் உரிய வகையில் நடைபெறுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-22,6)

## முதல் காலாண்டில்

# சுற்றுலாத்துறையால் 1,557 மில்லியன் டொலர்

இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களில் சுற்றுலாத்துறை மூலம் 1,557 மில்லியன் அமெரிக்க டொலர் ஈட்டப்பட்டுள்ளதாக இலங்கை மத்தியவங்கி தெரிவித்துள்ளது.
இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களில் வெளிநாட்டு ஊழியர்களின் பணம் 3,144 மில்லியன் அமெரிக்க டொலராகவும் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ச-இ)

# ரூபாவின் பெறுமதி ஏற்றம்

கொழும்பு, ஓக. 2
அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளதாக இலங்கை மத்தியவங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாய் 7.1 சதவீதமாக அதிகரித்துள்ளது.
முதல் ஆறு மாத காலப் பகுதியில் நாட்டின் கையிருப்பு 5.7 பில்லியன் அமெரிக்க டொலர் வரையில் அதிகரித்திருந்தது.
இந்தக் காலப்பகுதியில் வெளிநாட்டுப் பண அனுப்பல் 3,144 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவானதாக இலங்கை மத்தியவங்கி குறிப்பிட்டுள்ளது. (ச)

## நாளை

04.08.2024
ஞாயிற்றுக்கிழமை - ஆடி - 19
சுபநேரம் : 09.04 - 10.34
ராகுகாலம் : 04.34 - 06.04
ஆடிஅமாவாசை விரதம்

## நாளொரு நல்வார்த்தை

**கோபம் என்னும் அமிலம், எறியப்படும் இடத்தைவிட அதை வைத்துக் கொண்டிருக்கும் பாத்திரத்தையே பெரிதும் நாசப்படுத்தி விடும்**

-கிளெண்டல்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடக அறிக்கை
## தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய
## 2024 ஆம் ஆண்டிற்கான மகோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான அறிவுறுத்தல்கள்

ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 04.08.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.15 மணிக்கு ஆரம்பமாகி 19.08.2024 அன்று மாலை நிறைவடையும்.

**ஆலயத்திற்கு வருகை தருவோர்களுக்கான அறிவுறுத்தல்களும் கட்டுப்பாடுகளும்.**

ஆலய வழிபாட்டிற்கு வருகை தரும் அடியார்கள் எமது பண்பாட்டையும் கலாசாரத்தையும் பிரதிபலிக்கும் ஆடைகளையும் அணிந்து ஆசார சீலர்களாக வருகை தந்து ஆலயத்தின் புனிதத்தை பேணுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலயத்திற்கு வருகை தரும் அடியார்கள் பெறுமதி மிக்க தங்க ஆபரணங்களை அணிந்து வருவதை தவிர்த்துக்கொள்ளவும்.

ஆற்றில் நீராடும் அடியார்கள் ஆற்றில் போடப்பட்டுள்ள மிதவை எல்லைகளை தாண்டிச் செல்லவேண்டாம். அங்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றவும்.

மேற்படி மகோற்சவம் தொடர்பில் ஆலயத்தில் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற ஏற்பாட்டுக்கூட்டத்தில் மகோற்சவ காலத்தில் பின்வரும் ஏற்பாடுகளையும் நடைமுறைகளையும் பின்பற்றுவது தொடர்பாக தீர்மானிக்கப்பட்டது.

1. மகோற்சவ காலத்தில் ஆலயத்திற்கு வருகை தரும் எந்தவொரு வாகனமும் வீதித்தடைகளுக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது. சைக்கிள், மோட்டார் சைக்கிள், கார், வான், முச்சக்கர வண்டி மற்றும் வேறு வாகனங்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட பாதுகாப்பு தரிப்பிடத்தில் நிறுத்தப்பட வேண்டும்.
2. ஆலயவளாகத்தில் வீதித்தடைகளுக்கு உள்ளே உள்ள அன்னதான மண்டபங்களுக்கும், மற்றும் ஆலய வளாகத்தில் வீதித்தடைகளுக்கு உள்ளே வசிக்கும் குடும்பங்களுக்கும் மற்றும் ஆலயத்திற்கு தேவையான பொருட்களை வாகனத்தில் ஏற்றிச் செல்வதற்கும் பிரதேச செயலகத்தால் வழங்கப்படும் அனுமதி பத்திரத்தை பயன்படுத்தி தமது தேவையின் நிமித்தம் பிரயாணங்களை மேற்கொள்ளமுடியும்.
3. ஆலய வளாகத்தில் உள்ள விற்பனை நிலையங்களுக்கு பொருட்களை ஏற்றி இறக்கும் பணியினை மேற்கொள்வதற்கு விசேடமாக வழங்கப் படவுள்ள அனுமதி அட்டையில் குறிக்கப்பட்ட நேரத்தில் வீதித்தடையில் கடமையில் உள்ள பொலிஸாரிடம் காண்பித்து அனுமதி பெற்று உள்நுழைய ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
4. நகர சபையில் அனுமதி பெறாத நடைபாதை வியாபாரிகளுக்கும், தற்காலிக கடைகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.
5. கடை உரிமையாளர்கள் நகரசபையின் உதவியுடன் ஒவ்வொரு நாளும் முறையாக கழிவகற்றல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
6. பொருட்களின் நிர்ணயிக்கப்பட்ட விலையினை மீறி அதிக விலைக்கு விற்பனை செய்வோர் மீது விலைக்கட்டுப்பாட்டு பிரிவினரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
7. தனியார் காணிகளில் அமைந்திருக்கும் நிரந்தர கடைகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்பதுடன் ஆலய வீதியிலும் ஆலயத்திற்கு செல்லும் வீதிகளிலும் போக்குவரத்திற்கு தடை ஏற்படுத்தும் வகையில் நடைபாதை வியாபார நடவக்கைகளுக்கும் தற்காலிக கடை அமைக்கப்படுவதற்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது.
8. ஆலய பூசைகளின் போது ஆலய சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்ற தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
9. ஆலய மகோற்சவ காலத்தில் உணவு நிலையங்கள் அமைப்பவர்கள் நாட்டின் எப்பாகத்திலாவது உணவு நிலையம் நடாத்திய அனுபவம் மற்றும் மருத்துவ சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.
10. உணவு நிலையங்களில் உணவினை கையாள்பவர்களும் மற்றும் அன்னதான மடங்களில் பணிபுரிபவர்களும் அனைவரும் மருத்துவச்சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
11. உணவு நிலையங்களிற்கான குடிநீர் பொதுச்சுகாதார பரிசோதகரினால் அனுமதிக்கப்பட்ட இடத்தில் இருந்து பெறப்பட வேண்டும்.
12. 10 ம் திருவிழா தொடக்கம் இறுதி 7 நாட்களும் நீர்ப்பாசன நிறுவனத்தின் பாலத்தின்மீதான நடை பாதை திறக்கப்படும்.
13. ஆலய வளாகத்தில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
14. பச்சை குத்துதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.
15. ஆலய வளாகத்தில் காவடிக்காக செதில் குத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ப வர்கள் செதில் குத்தும் ஊசியினை 20 நிமிடங்கள் வரை கொதி நீரில் அவித்த பின்னரே அதனை பயன்படுத்த வேண்டும்.
16. ஆலயத்திற்கு வருகை தரும் பக்த அடியார்கள் பெறுமதிமிக்க தங்க ஆபரணங்களை அணிந்து வருவதை தவிர்க்கவேண்டும்.
17. ஆலய ஒலிபெருக்கி பாவனை தவிர வேறு ஒலிபெருக்கி பாவனைக்கு தடைவிதிக்கப் பட்டுள்ளது. எனவே தூக்கு காவடி, கரகங்களுடன் வரும் ஒலிபெருக்கி மற்றும் ஒலி பெட்டிகளின் ஒலிகளை வீதி தடைகளில் நிறுத்தி ஆலய வளாகத்துக்குள் நுளையும்படி தெரிவித்துக்கொள்கின்றோம்.

எனவே மேற்படி மகோற்சவ காலத்தில் ஆலயத்துக்கு வருகை தரும் சகல அடியவர்களும் மேற்படி நடைமுறைகளை பின்பற்றி மகோற்சவம் சிறப்பாக இடம்பெற ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**ஆலய நிர்வாகம்.**


## ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY

ஆங்கிலக் கற்கை நெறி - தொழில் புரிவோர் / உயர்தர கல்வியை நிறைவு செய்தோர்

1.க.பொ.த - உயர்தரம் கற்றோர் 2. க.பொ.த - சாதாரணதரம் கற்றோர்

**English classes for workers and A/L,O/L students**

1. Spoken / பேச்சுத்திறன்
2. Written / எழுதும் திறன்
3. Reading / வாசிப்புத் திறன்
4. Listening / செவிமடுக்கும் திறன்
5. Preparing for IELTS
   A) IELTS life skill
   B) Acadamic
   C) General

**03.09.2024 – திங்கட்கிழமை**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

Duration - 6 Months
Registration fee - 2000/-
Course fee - 30,000/-

**பாட நெறியின் முடிவில் நடத்தப்படும் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு சான்றிதழ்கள் வழங்கப்படும்.**



யாழ்ப்பாணம் - மாலை 05.00 pm - 7.00pm
(செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளி)
மானிப்பாய் - காலை 09.00am - 12.00 pm
(திங்கள், புதன் மற்றும் வெள்ளி)
மானிப்பாய் - மாலை 05.00pm - 07.00pm
(திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன்)

## VACANCY
### Account Assistant

**We are seeking for an energetic personality, who possess HNDA with three years experience.**

*Email your Biodata - samrajasuriar40@gmail.com*

Further details : Angel International School, Mathers Lane, Manipay.
Angel International School, No 17, Rasavinthoddam, Jaffna.

021-225-5628/0773068997/0775435968/0777231371


## மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 04 . 1991



இறப்பு 29 . 07 . 2024

**கருணாநிதி ஹரிஹரதாஸ் (B.Eng)**

(உரிமையாளர் - Hapniik Hallintoo Pvt. Ltd Sri Lanka, Aroma Product Sri Lanka, Akappai Restuarant India)

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், இந்தியா, இலங்கை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கருணாநிதி ஹரிஹரதாஸ் (உரிமையாளர் - Hapniik Hallintoo Pvt. Ltd இலங்கை, Aroma Product இலங்கை, Akappai Restuarant இந்தியா) கடந்த 29.07.2024 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கருணாநிதி - மோகனா (ஓய்வுபெற்ற எழுதுநர் -ஓய்வூதியத் திணைக்களம், யாழ். மாவட்ட செயலகம்) தம்பதியரின் (இந்தியா) சிரேஸ்ட புதல்வனும், தோமஸ் - குமாரி இமல்டா தம்பதியரின் (இந்தியா) அன்பு மருமகனும், பிரீதா டார்பினியின் (இந்தியா) பாசமிகு கணவரும், கேசியா செபோராலின் (இந்தியா) அன்புத் தந்தையும், சரவணதாஸ் (பிரான்ஸ்) இன் பாசமிகு சகோதரரும், அஸ்லின் டார்பினியின் (இந்தியா) அன்பு மைத்துனரும், சத்தியசீலன் (இலங்கை), அமரர் தயாநிதி, ஜதார்த்தனன் (அமெரிக்கா), அருளாளன் (கனடா), அருந்ததி (டென்மார்க்), சுசிலாதேவி (நோர்வே) ஆகியோரின் அன்புப் பெறாமகனும், சரஸ்வதி (இலங்கை), குணலக்சுமி (இலங்கை), யோகலக்சுமி (கனடா), மோகன் (நோர்வே), அமரர் மோகனதாஸ், மோகனச்சந்திரன் (நோர்வே), பாஸ்கரன் (சுவிஸ்) ஆகியோரின் அருமை மருமகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - தங்கரெட்ணம் (பாலாம்பிகை) தம்பதியினர், காலஞ்சென்றவர்களான நடராஜா - பத்மாவதி தம்பதியரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04.08.2024) ஞாயிற்றுக்கிழமை கே.கே நகர் திருச்சியிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பூதவுடல் தகனக்கிரியைக்காக ஓயாமாரி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**+33 753 266 359**
**+91 944 350 9938**

(CS/1062) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டிக்கு உறுதியளிப்பவரை தமிழ் மக்கள் ஆதரிக்கலாம்!!!

யாழ்ப்பாணம், ஓக. 3

ஜனாதிபதித் தேர்தலில் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைக்கும் வேட்பாளருக்கே நாம் வாக்களிக்கவேண்டும் என வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு – கிழக்கு தமிழ்பேசும் மக்களுக்கு நிலையான, கௌரவமான, உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு கோரி 2022ஆம் ஆண்டு ஆவணி முதலாம் திகதி சுழற்சி முறையிலான 100 நாள்கள் செயல்முனைவை ஆரம்பித்து, 2022ஆம் ஆண்டு கார்த்திகை எட்டாம் திகதி சமஷ்டித் தீர்வுக்கான மக்கள் பிரகடனத்தை வெளியிட்டோம்.

இதுவரை காலமும் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசியல் தலைமைகள் அரசியல் தீர்வுகள் பற்றி வாயளவில் கதைத்து தமிழ் மக்களை ஏமாற்றி வந்துவிட்டனர். எவ்வளவு காலத்துக்கு எமது வருங்கால சந்ததியினரும் இந்த அடக்குமுறைகளையும் ஏமாற்றங்களையும் அனுபவிக்கப் போகின்றோம்.

எமது தலைமுறையுடன் துன்பங்களை முடிவுக்குக் கொண்டு வர ஒரு மக்கள் சமூகமாக ஒருங்கிணைந்து செயற்படுவோம்.

இதற்கு அனைவரும் ஜனநாயக வழிநின்று செயற்படும் ஒரு சமூக இயக்கமாக பரிணமிக்க வேண்டும்– என்றார்.

(ஓ–25–27–66)

## ஆறாத்துயரில் ஆறாண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 01 . 08 . 1940



ஆண்டவன் அடியில் 10 . 08 . 2018

**அமரர் செல்லத்துரை கார்த்திகேசு**
**8ம் வட்டாரம், மண்டைதீவு**
**திதி : 03.08.2024**

குடும்பத்தின் குலவிளக்காயிருந்து – எம்
வாழ்வினை சுபீட்சமாக மிளிரவைத்து
பெருவிருட்சமாய் எம் வாழ்வு நிலை பெற
எம்மை விட்டுப் பிரிந்து சென்றதேனோ!
ஆற்றமுடியவில்லை ஆறாண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகளை.

8ம் வட்டாரம், மண்டைதீவு,
யாழ்ப்பாணம்.

(CS/28282) J-1

பிரிவினால் துயருறும்
குடும்பத்தினர்


## வேலையாட்கள் தேவை

| | |
|---|---|
| ➤ மேசன் | - Rs 3000.00 |
| ➤ மேசன் உதவியாளர் | - Rs 2000.00 - 2500.00 |
| ➤ பெயின்ரர் | - Rs 2500.00 |
| ➤ பெயின்ரர் உதவியாளர் | - Rs 2000.00 |
| ➤ வெல்டர் உதவியாளர் | - Rs 2000.00 |
| ➤ வயறிங் | - Rs 2500.00 - 3000.00 |
| ➤ பிளமிங் | - Rs 2500.00 - 3000.00 |
| ➤ தச்சு வேலை (அனுபவமுள்ளவர்கள்) | - Rs 2500.00 - 3000.00 |

தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்

(CS/55824) J-1

தொடர்பு :- 077 210 0749
(காலை 8.30 - மாலை 5.00 வரை) யாழ்ப்பாணம்.

## வேலையாட்கள் தேவை

➤ **தொழில்நுட்ப உத்தியோகத்தர் (TO)**
HND or NCT - CIVIL/QS)

➤ **கணிய அளவையியலாளர் (QS)**
HND or NCT - CIVIL/QS

➤ **உதவி கணிய அளவையியலாளர் (AQS)**
HND or NCT - CIVIL/QS

➤ **கணக்காளர்** (Accountant)

➤ **கணக்கு உதவியாளர்** (Assistant Accontant)

➤ **அலுவலக உதவியாளர்** (Office Assistant)

சுயவிவரக்கோவையை Whatsapp / Email மூலம் அனுப்பி வைக்கவும்.

(CS/55825) J-1

Email: shaganaconstruction@hotmail.com
WhatsApp: 077 210 0749
யாழ்ப்பாணம்.


# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்
## மயில்வாகனம் ஆனந்தரெட்ணசாமி

(நிறுவுநர், எவகிறீன் அச்சகம் - மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்)



நீளமாய் நினைந்து கொள்வோம்
நெறியுடையோன் வாழ்வை எண்ணி
வானமாய் விரிந்த நெஞ்சில்
வைகறை பொழுதின் எழிலில்
நேசமாய் இருந்த பெரியோன்
நிறைவுடன் வாழ்ந்த நல்லோன்
பிரிதுயர் தந்து ஆண்டொன்று
பெருந்துயர் கொண்டோம் நாமின்று
உயிர்ப்புடன் நாளும் நினைவோம்
எவகிறீன் குடும்பம் தன்னில்

**மலர்வு**
**04.09.1955**

**உதிர்வு**
**14.08.2023**

**நித்தம் உங்கள் நினைவுகளோடு உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தில்லைக் கூத்தனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**25/1, மாரியம்மன் கோவில் வீதி, கல்லடி, மட்டக்களப்பு.**
**தொ.பே: 077 433 2140, 077 714 1444**

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 06. கனகரத்தினம் வீதி 1ம் ஒழுங்கை. 22ம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சதாசிவம் பெண் நாகம்மா என்ற பெயரில் யாழ். மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் சுப்பிரமணியம் சதாசிவமும் பெண் நாகம்மாவும் 1951.09.17 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கந்தையா தில்லையம்பலம் முகதாவில் 97ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் சிவக்கொழுந்து தம்பித்துரை பெண் சரஸ்வதியம்மா என்பவரிற்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

பின்னர் குறித்த ஆதனத்தை சிவக்கொழுந்து தம்பித்துரையும் பெண் சரஸ்வதி அம்மாவும் 1965.04.21 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் செல்வநாயகராசா மகாதேவா முகதாவில் 3652 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் அம்பலவாணர் சின்னத்துரைக்கும் பெண் செல்லம்மாவுக்கும் அறுதியாக விற்றுள்ளனர்.

குறித்த ஆதனத்தை அம்பலவி அல்லது அம்பலவாணர் சின்னத்துரை 1976.06.06 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் செல்வநாயகராஜா மகாதேவா முகதாவில் 5734 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் அம்பலவாணர் சின்னத்துரை பெண் செல்லம்மாவுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை அம்பலவி அல்லது அம்பலவாணர் சின்னத்துரை கைம்பெண் செல்லம்மா 1977.11.14 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் செல்வநாயகராஜா மகாதேவா முகதாவில் 5932 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய கட்டுப்பாட்டு அறுதி உறுதி மூலம் பொன்னு இரத்தினம் பெண் அன்னம்மாவுக்கு கட்டுப்பாட்டுக்கமைவாக அறுதியாக விற்றுள்ளார்.

குறித்த ஆதனத்தை பொன்னு இரத்தினமும் பெண் அன்னம்மாவும் 1980.03.16 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் செல்வநாயகராஜா மகாதேவா முகதாவில் 6350 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் அம்பலவி அல்லது அம்பலவாணர் சின்னத்துரை கைம்பெண் செல்லம்மாவுக்கு அறுதியாக விற்றுள்ளார்.

குறித்த ஆதனத்தை பெருமாள்பிள்ளை ராஜ்குமார் 12.08.2023 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு புஸ்பரட்ணம் அபிதன் முகதாவில் 289 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் ஜதீஸ்வரன் அரிஹரனுக்கு தனது பங்கான சொரியலாக அரைவாசிப்பங்கினை அறுதியாக விற்றுள்ளார். மேற்குறித்த உறுதியில் "எனது தந்தையின் தாயாரான காலஞ்சென்ற அம்மபவாணர் சின்னத்துரை கைம்பெண் செல்லம்மாவின் பெயரில் 1976ம் ஆண்டு ஆனி மாதம் 06ம் திகதி நொத்தாரிசு சுப்பிரமணியம் செல்வநாயகராஜா மகாதேவா முகதாவில் 6350ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதிப்படி சொந்தமாக இருந்து அவர் மரண சாதனம் ஏதும் நிறைவேற்றாமலும் நிர்வகிக்கப்பட வேண்டிய பெறுமதிக்கும் குறைவான பெறுமதியுடைய சொத்துக்களையும் விட்டுக் காலஞ்செல்ல அவரிற்குப் பிள்ளைகளான பெருமாள்பிள்ளை. பரமேஸ்வரி. சரஸ்வதி ஆகியவர்களில் அவரது இரு பெண் பிள்ளைகளான பரமேஸ்வரி. சரஸ்வதி என்பவர்களிற்கு சீதனம் அளிக்கப்பட்டமையால் அவர்களினை தவிர்த்து சின்னத்துரை கைம்பெண் செல்லம்மாவின் ஒரே ஆண் வாரிசாகிய எனது தந்தையான காலஞ்சென்ற சின்னத்துரை பெருமாள்பிள்ளையினை வந்தடைந்ததென்றும் அவர் மரண சாதனம் ஏதும் நிறைவேற்றாமலும் நிர்வகிக்கப்பட வேண்டிய பெறுமதிக்கும் குறைவான பெறுமதியுடைய சொத்துக்களையும் விட்டுக் காலஞ்செல்ல அவரது பிள்ளைகளான யதீஸ்வரன். நான். வாசுகி. வாமதி ஆகியவர்களில் சீதனமளிக்கப்பட்ட வாசுகி மற்றும் வாமதியினை தவிர்த்து என்னையும் எனது சகோதரனையும் வந்தடைந்த வழியுரிமைப்படி குறித்த ஆதனத்தில் சொரியல் அரைவாசி வழியுரிமைப்படி என்னை வந்தடைந்த சொந்தமும் ஆட்சியுமுடையதாகும்..." என பெருமாள்பிள்ளை ராஜ்குமாரினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை ஜதீஸ்வரன் அரிஹரனும் பெண் லக்ஷாயினியும் 2024.05.23 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு பசுபதி ஐங்கரன் முகதாவில் 86 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் அமல் அன்ரனிக்கு அறுதியாக விற்றுள்ளார். குறித்த உறுதியில் இதற்கு முன்பந்தியில் குறிப்பிட்டவாறு இவ்வுறுதியிலும் ".......சின்னத்துரை பெருமாள்பிள்ளையினை வந்தடைந்ததென்றும் அவர் மரண சாதனம் ஏதும் நிறைவேற்றாமலும் நிர்வகிக்கப்பட வேண்டிய பெறுமதிக்கும் குறைவான பெறுமதியுடைய சொத்துக்களையும் விட்டுக் காலஞ்செல்ல அவரது பிள்ளைகளான ராஜ்குமார். எனது தந்தை ஜதீஸ்வரன். வாசுகி. வாமதி ஆகியோரில் சீதனமளிக்கப்பட்ட வாசுகி. வாமதி ஆகியோரைத் தவிர்த்து ராஜ்குமார் மற்றும் எனது தந்தை ஜதீஸ்வரன் ஆகியோரை வந்தடைந்த சொரியல் அரையரைவாசி சொந்தமும் ஆட்சியுமாய் இருந்து எமது சிறிய தந்தை ராஜ்குமார் தனது சொரியல் அரைவாசியை ஏற்கனவே அறுதி விற்றிருந்த நிலையில் மிகுதி சொரியல் அரைவாசி எனது தந்தை பெருமாள்பிள்ளை ஜதீஸ்வரனை வந்தடைந்து அவர் மரணசாதனம் எதுவும் நிறைவேற்றாமலும் நிர்வகிக்கப்படவேண்டிய பெறுமதிக்கும் குறைவான பெறுமதியுடைய சொத்துக்களை விட்டிறக்க அவரது ஒரே வாரிசான ஜதீஸ்வரன் அரிஹரனை வழியுரிமையாக வந்தடைந்த மிகுதி சொரியல் அரைவாசிப்பங்கும் சொந்தமும் ஆட்சியுமாகும்..." என வெளிப் படுத்தியுள்ளனர்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம். யாழ்ப்பாணம் மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி. சுண்டிக்குளி கோவிற்பற்று. சிவியாதெரு இறை. நல்லூர் பிரதேச செயலகப்பிரிவு. யாழ்ப்பாணம் மாநகரசபை. J/96 கிராம உத்தியோகத்தர் பிரிவு.

"செம்மணத்தியன் புலம்" நிலப்பரப்பு 3 குழி 15 இதில் ஏற்கனவே கொடுபட்ட நிலப்பரப்பு 2 நீக்கி மிகுதி நிலப்பரப்பு 1 குழி 15 இது 2023.05.08ம் திகதி உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் கே.தியாகராஜா அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 310ம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு ஒன்று குழி பதினான்கு தசம் பூச்சியம் மூன்று (நில.பர 1. குழி 14.03) இதில் சொரியலாய் அரைவாசியும் (இதன் பதிவு யாழ்ப்பாணம்) மிகுதி சொரியல் அரைவாசியும் (யாழ்ப்பாணம்) இரண்டும் சேர்த்து முழுவதும். இந்த நிலப்பரப்பு ஒன்று குழி பதினான்கு தசம் பூச்சியம் மூன்று (நில.பர 1 குழி 14.03) இதற்கு குறித்த 310ம் இலக்க நிலஅளவைப் படத்தின்படி எல்லைகள்

| | | |
|---|---|---|
| கிழக்கு | : | சுப்பையா சாந்தநாதனும் பெண் குணபூரணியினதும் அருள்ராஜ் சனுஜாவின் ஆதனங்கள் |
| வடக்கு | : | கனகரத்தினம் முதலாம் வீதியும் அருள்ராஜ் சனுஜாவின் ஆதனமும் |
| மேற்கு | : | ரவிச்சந்திரன் விஜயரஞ்சினியினதும் கணபதிப்பிள்ளை விஜயகுமாரினதும் ஆதனங்கள் |
| தெற்கு | : | வேலேந்திரன் ராங்கதேவியினது ஆதனம் |

இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்

தற்போது அமல் அன்ரனி இவ்வாதனத்தை தனது பெயரினை எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அமல் அன்ரனி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(CR.43035) (n-1)

# 24 மில்லியன் மோசடி: கில்லாடிப் பெண் கைது

கொழும்பு, ஓக. 3

கனடா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, இத்தாலி, டுபாய் ஆகிய நாடுகளில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி ஏமாற்றி 24 மில்லியன் ரூபாவை மோசடிசெய்த பெண் ஒருவர் கந்தானைப் பிரதேசத்தில் வைத்து வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் கந்தானை பிரதேசத்தில் அனுமதிப்பத்திரம் பெற்று வேலைவாய்ப்பு நிலையம் ஒன்றை நடத்தினாலும், மேற்படி நாடுகளில் தொழில் வழங்குவதற்கான முறையான அனுமதிப்பத்திரம் அந்த நிறுவனம் பெற்றுக்கொள்ளவில்லை.

குறித்த பெண்ணுக்கு எதிராக பணியகத்துக்கு 19 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ச-இ)

**தோட்டக்காணி தேவை**

பலாலியை அண்டிய பகுதிகள்,
புன்னாலைக்கட்டுவன்
வசாவிளான் ஆகிய பகுதிகளில்
தோட்டம் செய்வதற்கு
தோட்டக்காணிகள் தேவை.

தரகர்கள் தொடர்புகொள்ள வேண்டாம்

தொடர்பு: **076 353 2479**

(cs 55840) N-1)

## கண்ணீர் அஞ்சலி

## கருணாநிதி ஹரிஹர்தாஸ் (ஹரி)



அன்னை மடியில் 21.04.1991

ஆண்டவன் அடியில் 29.07.2024

கருணாநிதி - மோகனா தம்பதியரின்
சிரேஷ்ட புதல்வன் கருணாநிதி
ஹரிஹர்தாஸ் கடந்த 29.07.2024
கொழும்பில் பரமனடி சேர்ந்த செய்தி அறிந்து
ஆறாத்துயர் கொண்டுள்ளோம்.
அன்னாரின் பிரிவால் துயரடைந்திருக்கும்
அவரது குடும்பத்தினர், பெற்றோர்,
உறவினர், நண்பர்களுக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(cs. 55835) (N-1)

**இ. இராஜ்குமார் குடும்பம்**
**திருநெல்வேலி.**

## நெஞ்சைவிட்டு நீங்கா ஈராண்டு நினைவு

தாயின் மடியில்
12 . 11 . 1977



காலனின் பிடியில்
27 . 07 . 2022

## அமரர் தங்கராசா செந்தில்குமரன்

**(திதி : தேய்பிறை சதுர்த்தசி - 03.08.2024)**

அன்பின் செல்வமே எங்கள் அப்பா
ஆனந்தத்தின் பிறப்பிடமே எங்கள் அப்பா
ஈராண்டென்ன இருகோடி ஆண்டுகள் சென்றாலும்
மாறாதப்பா உங்கள் நினைவு

நீங்கள் இல்லா உலகில் சிறுபொழுதும் வெறும் பொழுதாக
பெரும் வேதனையுடன் கழிகின்றதப்பா
அப்பாவின் பாசத்தில் பல்லாண்டு வாழ்வோம் என்றிருந்தோம்
முடியவில்லை எல்லாம் பகல் கனவாகிப் போனதே!

காலங்கள் ஓடிப்போனாலும் உங்கள் மீது கொண்ட
அன்பு என்றும் மாறாதப்பா
எம் அருகில் நீங்கள் இல்லையென்றாலும்
எம் மனதில் என்றும் உயிராய் இருப்பீர்கள்
அன்பான எங்கள் அப்பாவைக்காண ஆசையோடு காத்திருக்கின்றோம்.
வாருங்கள் அப்பா வாருங்கள்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*என்றும் உங்கள் நினைவுடன்*
**குடும்பத்தினர்.**

(CS 1044) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
12 . 06 . 1954



ஆண்டவன் அடியில்
31 . 07 . 2024

## கந்தையா தர்மரட்ணம்
(ஓய்வுபெற்ற புகையிரத பாதுகாவலர்)

தலையாட்டி கரணவாய் தெற்கை பிறப்பிடமாகவும், கரணவாய் மத்தி கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தர்மரட்ணம் அவர்கள் கடந்த 31.07.2024 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா வள்ளியம்மை தம்பதிகளின் செல்வப் புதல்வனும், தர்மராஜா, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மஹாலட்சுமி யின் பாசமிகு கணவரும், ஹேவானந் (அமரர்), துஹாரகா (கனடா), சரவணபவன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், லிங்கேஸ்வரன்(கனடா), தயாளினி (கனடா), கார்த்திகேயினி (மட்டக்களப்பு), கௌரி (சுவிஸ்), நந்தகுமார், சஞ்சீவன், விதுசன், ஜெனகன், ஜதுசன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கிருஷானி (கனடா), நிகிலேஷ் (கனடா) ஆகியோரின் பாட்டனாரும், ஜெயலட்சுமி (பிரான்ஸ்), ரூபலட்சுமி (கனடா), குகலட்சுமி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், அருள்தாஸ் (பிரான்ஸ்), செல்வ குமார் (கனடா), சுஜன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்சினி (அவுஸ்தி ரேலியா), யசோதினி (கனடா), ராதா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (03.08.2024) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்பு இலக்கம்
0768844858, 074 272 5475

(CR 430391) A-1

எங்கள் அன்புச் செல்லம்

# அமரர் இராசேந்திரம் நிலுஜன்

அவர்களின்

## 4ஆம் வருட நீங்கா நினைவலைகள்



தாயின் மடியில்
11 . 10 . 1995

இறைவன் அடியில்
19 . 07 . 2020

கண் முன்னே வாழ்ந்து
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உம் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு நீர் மறைந்து
விண்ணகம் சென்றாலும்
கண்விட்டு மறையாது
உம் நினைவுகள்
கண்ணீர் துளிகளாய்
நிலுஜா எம் மனம் கனமாகி தவிக்கின்றோம்

உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பசுபதியார் வீதி,
சங்கத்தானை
சாவகச்சேரி.

பாசத்துடன்
அப்பா, அம்மா, அண்ணன்மார்
கோபிகன் (கனடா), யுகதர்ஷன்(பிரான்ஸ்)



# நிலக்சன் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஒக. 3

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட் டில் ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 17ஆம் ஆண்டு நினை வேந்தல் யாழ். ஊடக அமையத்தில் அந்த அமைப்பின் தலைவர் து.செல் வகுமார் தலைமையில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது. மறைந்த ஊட கவியலாளர் சகாதேவன் நிலக்சனின் திருவுருவப்படத்துக்கான பிரதான சுடரை ஊடக அமையத்தின் செயலர் நிதர்சன் ஏற்றிவைத்தார். பிரதான மலர் மாலையினை ஊடக அமையத் தின் முன்னாள் செயலர் அணிவித்து அஞ்சலி செலுத்தினர். ஏனைய ஊட கவியலாளர்கள் மலர் தூவி நினை வஞ்சலி செலுத்தினர்.

(ஒ-20,27-125)

## வேலை...

தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதே தமது நோக்கமாகும் எனவும் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்திருந்த ஜனாதிபதி ரணில், விருந்தினர் விடுதி யொன்றில் இளைஞர்களைச் சந்தித்து உரையாற்றினார். இதன்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்ததா வது:-

கொவிட் தொற்றுநோய் மற்றும் பொரு ளாதார வீழ்ச்சி காரணமாக கடந்த 4 வருடங்களாக இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்பை வழங்க முடிய வில்லை. ஆனால், நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டிருப்பதால் தற்போது வேலை வாய்ப்புகளை உரு வாக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள் ளது.

இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை அர சாங்கம் ஒருபோதும் மறக்கவில்லை. நிதிப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்கம் இந்த வருடம் நிதி ஒதுக்கி யுள்ளது. இதேவேளை - சுயதொழிலில் ஈடுபட விரும்பும் இளைஞர்களுக்கு நிவாரணத்துடன் கூடிய கடன் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது - என்றார்.

(அ-ம-26)

## விபத்தில்...

படுகாயமடைந்த முதியவர் சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார். பத்மநாதன் ஜெயராசா (வயது -64) என்பவரே இவ் வாறு உயிரிழந்தவராவார்.

ஜூலை மாதம் 26ஆம் திகதி, மோட்டார் சைக்கிளில் மன்னாருக்குச் சென்று கொண்டிருந்த அந்த முதியவர், சைக்கி ளில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவ ருடன் மோதுண்டு வீழ்ந்த நிலையில், கடுமையான காயங்களுக்கு உட்பட்டுள் ளார். இதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட அவர், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசா ரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசா ரணை அதிகாரி வின்சன் தயான் அன்ரலா மேற்கொண்டார்.

(அ-ம-26)

## மோ.சைக்கிள்...

விபத்தில் படுகாயமடைந்த முதியவர் ஒருவர் சிகிச்சையின் போது உயிரிழந் துள்ளார். வீரகத்தி (வயது-56) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுவிட் டுத் திரும்பிக் கொண்டிருந்தபோது, அதிவேகமாக வந்த மோட்டார்சைக்கிள் மருமகளுடன் பயணித்துக் கொண்டி ருந்த மேற்படி முதியவரை மோதித் தள் ளியுள்ளது. இதையடுத்து படுகாயங்க ளுக்கு உள்ளான அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச் சையின்போது உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசா ரணை அதிகாரி வின்சன் தயான் அன்ரலா மேற்கொண்டார். (அ-ம-26)

## 300,000...

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங் கல் திட்டத்தின் தாளையடி கடல்நீரை நன்னீராக்கும் நிலையமானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட் கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி ஏற்பாடு களின் கீழ் நடத்தப்படுகிறது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியின் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வ தற்காக, இலங்கை அரசாங்கம் 2011 ஆம் ஆண்டில் மற்றும் ஆசிய அபிவி ருத்தி வங்கி மற்றும் பிரான்ஸ் அபிவி ருத்தி வங்கி ஆகியவற்றின் உதவியுடன் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தேசிய மட்டத்தில் 2.5 மில்லியன் நீர் இணைப்புகள் காணப்படும் நிலையில் இந்தத் திட்டத் தின் கீழ் மேலும் 60 ஆயிரம் இணைப் புகள் வழங்கப்படவுள்ளன.

3 இலட்சம் பேருக்கு பாதுகாப்பாக குடி தண்ணீரையும், 80 ஆயிரம் பேருக்கு சுகாதார வசதிகளையும் வழங்குவது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

(அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசம்பாவிதங்களைத் தடுக்க இணக்கத்துக்கு வாருங்கள்

## வடக்குக் கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 3**

**இந்திய மீனவர்கள் எல்லைதாண்டி வருகின்றபோது இடம் பெறுகின்ற கைதுகள், துன்பியல் நிகழ்வுகளை எதிர்காலத்தில் சந்தித்து விடக்கூடாது என்பதற்காகவே நாம் பேச்சுக்கு அழைக்கின்றோம். ஆனால் இந்திய அரசாங்கமும் அந்த நாட்டு மீனவர்களும் காது கொடுத்து கேட்பதாக இல்லை.**

-இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம். ஆலம் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர் ஒருவரை கைதுசெய்ய முயன்றபோது கடற்படை வீரர் ஒருவர் உயிரிழந்தார்.

அதேபோன்றுதான் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டபோது மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்திய மீனவர்களின் எல்லைதாண்டிய வருகை உடன் நிறுத்தப்பட வேண்டும். இலங்கைக் கடலில் உயிரிழப்பு ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும். குறித்த விடயத்தை நாம் வலியுறுத்தி வருகின்றபோதும் இந்திய அரசாங்கமும் அந்நாட்டு மீனவர்களும் காது கொடுத்துக் கேட்பதாக இல்லை.

இந்திய மீனவர்களை பேச்சுக்கு அழைத்தபோதும் இதுவரை அவர்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை.

எல்லை தாண்டி வருகின்றபோது இடம்பெறுகின்ற கைதுகள், இவ்வாறான துன்பியல் நிகழ்வுகளை எதிர்காலத்தில் இரு நாட்டு மீனவர்களும் சந்தித்து விடக்கூடாது - என்றார். (ச-56)

### அத்துமீறிய மீன்பிடி

# 23 இந்திய மீனவர்கள் நீதிமன்றால் விடுவிப்பு!

## மூவருக்கு ஒருவருடச் சிறை!

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களில் 23 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், மூவருக்கு ஒரு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள் ளது. இலங்கைக் கடற்பரப்புக்குள் வைத்துக் கைதுசெய்யப்பட்ட 64 மீனவர்களின் வழக்குகள் கடந்த செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவர்களில் கடந்த ஜூன் மாதம் 16ஆம் திகதி மற்றும் 22ஆம் திகதிகளில் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதான 26 மீனவர்களில் 23 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் மூவர் இரண்டாவது தடவையாகவும் கைது செய்யப்பட்டமையால் அவர்களுக்கு ஒரு வருடச் சிறைத்தண்டனை விதித்து நீதவான் உத்தரவிட்டார்.

விடுவிக்கப்பட்ட 23 பேரில் மூவர் படகு உரிமையாளர்கள் என்பதுடன் அவர்களுக்குத் தலா 4 மில்லியன் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. அபராதம் செலுத்தத் தவறும் பட்சத்தில் 6 மாத சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

மேற்குறித்த இரண்டு தினங்களிலும் கைப்பற்றப்பட்ட மூன்று படகுகளும் அரசுடைமையாக்கப்பட்டன. இதேவேளை, ஜூலை மாதம் முதலாம் திகதி கைது செய்யப்பட்ட 25 மீனவர்க ளின் விளக்கமறியல் எதிர்வரும் 6ஆம் திகதி வரையும், 11ஆம் திகதி கைதான 13 மீனவர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 8ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

# மரணவீட்டில் பட்டப்பகலில் துணிகர திருட்டு முயற்சி!

## சந்தேகநபரான பெண் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 3

மரண வீட்டில் பட்டப்பகலில் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட பெண்ணொருவர், அங்கிருந்தவர்கள் உசாரடைந்ததையடுத்து தப்பியோடியுள்ளார்.

மரணவீட்டுக்கு வந்தவர்களில் ஒருவராகத் தன்னை அடையாளப்படுத்தியிருந்த அந்தப் பெண், சடலம் எடுத்துச் செல்லப்பட்ட பின்னர் வீட்டுக்குள் சென்று சில பொருள்களைத் திருடியுள்ளார் வீட்டிலுள்ளவர்கள் உசாரடைந்து அது தொடர்பில் வினவியபோது அவர், அங்கிருந்து சென்று ஏற்கனவே தயார் நிலையில் நின்ற ஓட்டோவில் ஏறி இராசவீதியூடாக தப்பியோடியுள்ளார். (ம)



கிளிநொச்சி, பூநகரி முக்கொம்பன் மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களின் மாதிரிச் சந்தை நிகழ்வு, கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

பாடசாலை முதல்வர் ப. ஜோயல் பியசீலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் சந்தையின் கொள்வனவு, விற்பனை, வங்கி நடவடிக்கைகள் போன்ற பல்வேறு விடயங்களை, மாதிரிச் சந்தை ஊடாக அறிந்து கொண்டனர். (ப-13)

# வயோதிபப் பெண்ணிடம் நகை, பணம் கொள்ளை

## தடயவியல் பொலிஸார் நடவடிக்கை!



யாழ்ப்பாணம், ஓக. 3

வடமராட்சி கிழக்கு, குடத்தனை மேற்கு பகுதியில் தனிமையிலிருந்த வயோதிபப் பெண்மீது இனந்தெரியாத நபர்கள் நேற்றுமுன்தினம் அதிகாலை தாக்குதல் மேற்கொண்டதுடன், பணம் மற்றும் நகைகள் என்பவற்றையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

வயோதிபத் தாயார் அணிந்திருந்த தோடு, அவருடைய உடைமையில் காணப்பட்ட 10 ஆயிரம் ரூபா பணம் என்பன கொள்ளையிடப்பட்டதுடன், காணியின் உறுதிப்பத்திரம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் தீவிரமான விசாரணைகள் பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், தடயவியல் பொலிஸாரும் அங்கு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-27)



# முருகானந்தாவுக்கு மூன்று வெற்றிகள்

வடக்கு பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழிக் கலைத்திறன் போட்டியில் முருகானந்தா கல்லூரி மூன்று வெற்றிகளை பதிவு செய்துள்ளது. இந்த வலய மட்டப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை முருகானந்தா கல்லூரியில் நடைபெற்றது. போட்டியில் முருகானந்தா கல்லூரி மாணவிகளான கமலகாந்தன் நேத்ரா பிரிவு-5 பாஓதல்போட்டியில் முதலாமிடத்தையும் சிவபாலன் ரசிக்கா பிரிவு- 5 இலக்கிய விமர்சனத்தில் முதலாமிடத்தை யும் சிவகுருநாதன் அபிராமி, நேத்ரா, ரசிக்கா பிரிவு- 5 விவாதப் போட்டியில் இரண்டாம் இடங்களையும் பெற்று மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளனர். (ரி-13)

# யானை ஒன்று சடலமாக மீட்பு



முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட கள்ளியடி வயல் வெளிப் பகுதிக்கு அருகில் யானையொன்று இறந்த நிலையில் அவதானிக்கப்பட்டுள்ளது. யானையின் உடலில் இருந்து துப்பாக்கிச் சன்னங்களும் மீட்கப்பட்டுள்ளன.

வன உயிரிகள் திணைக்களத்தினர் மற்றும் புதுக்குடியிருப்புப் பொலிஸார் யானையின் சடலம் மீட்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பில் அருகிலுள்ள விவசாயிகளிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ள நிலையில், யானையின் சடலம் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. (ம-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாணத்தில்...

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் தாளையடி கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்த நீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஆரம்பிக்கக் காணி வழங்கிய மக்களுக்கு நன்றி. தாளையடிப் பகுதிக்கு தனியானதொரு கிராம சேவகர் பிரிவை நிறுவுமாறு மக்கள் கோரியுள்ளனர். அதனை செய்யுமாறு ஆளுநருக்கு பணிப்புரை விடுத்துள்ளேன். இந்தச் சுத்திகரிப்பு நிலையம் யாழ்ப்பாணத்தின் குடிநீர்ப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வை வழங்கும்.

எதிர்காலத்தில் வளவ கங்கை நீர்த்திட்டத்தையும் ஆரம்பிப்போம், அதனால் பூநகரிக்கு நீர் கிடைக்கும். அதேபோல் யாழ். நதி நீர்த் திட்டத்தை ஆரம்பிப்போம். இந்தத் திட்டங்கள் வந்தால் யாழில் நீர்ப் பிரச்சினை இருக்காது. வடமராட்சி செழிப்பான பிரதேசமாக மாறும்.

அடுத்த 5 - 10 வருடங்களில் யாழ்ப்பாணம் அபிவிருத்தி அடைந்த மாவட்டமாக மாற்றப்படும். அதேநேரம் மத்திய அரசாங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளாமல் இருக்கத் தீர்மானித்துள்ளது. மாகாணசபையால் அதனை செய்ய முடியும். எனவே நாம் அடுத்தபடியாக பொருளாதார யுத்தத்தை எதிர்கொள்ள ஆரம்பிப்போம். அதற்கான பணிகளை நாம் முன்னெடுக்க வேண்டும். உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள், சீன எக்ஸிம் வங்கி, பிணைமுறி கடன் வழங்குநர்களுடன் உடன்பாடுகளை எட்டியுள்ளோம். அதனால் வெளிநாட்டுக் கடன்கள் எமக்குக் கிடைக்கும். ஜப்பான் அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பிப்பதாக உறுதியளித்துள்ளது. மற்றைய நாடுகளுடனும் அந்த இணக்கப்பாடுகளை ஏற்படுத்துவோம்.

தற்போது நாட்டுக்குள் பணப் புழக்கம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்தும் இதனைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும். நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் வேளையில், யாழ்ப்பாணமும் பொருளாதாரத்தின் கேந்திர முக்கியத்துவமான பகுதியாக மாறும்" - என்றார். இராஜாங்க அமைச்சர்களான கலாநிதி சுரேன் ராகவன், காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன், தேசிய பாதுகாப்புத் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-ம-26-20)

## அனைத்து...

13 ஆவது திருத்தம் என்பதற்கு அப்பால், அனைத்து இலங்கையர்களும் ஏற்கின்ற தீர்வே வழங்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட ரவிகருணாநாயக்க 'உதயன்' அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலும் கலந்துகொண்டார். இதன்போது அவரிடம், பொங்கல் பண்டிகைக் காலத்தில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவேன் என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்தார். தற்போது, 'பொலிஸ், காணி அதிகாரங்கள் நீங்கலாக 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும்' என்று ரணில் சார்பான தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உண்மையில் இது தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாடு என்ன? என்று வினவப்பட்டது.

இதற்கு, ரவி கருணாநாயக்க தெரிவித்ததாவது:-

"இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் தமிழர்கள் வாழ்கின்றனர் என்ற புரிதலை நீங்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள மக்களுக்கு வெவ்வேறு பிரச்சினைகள் உள்ளன. ஆதலால், அனைத்து இலங்கையர்களும் என்ற சித்தாந்தத்தின் பாற்பட்டுத்தான் தீர்வு வழங்கப்படும்" - என்றார்.

இதையடுத்து, 13ஆவது திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்துவேன் என்று சஜித் தெரிவித்துள்ளாரே? என்று ஊடகவியலாளர்கள் வினவியதற்கு, "யாழ்ப்பாணத்தில் வைத்து அவர் இவ்வாறு தெரிவிப்பார். கொழும்பில் வைத்து இன்னொன்றைத் தெரிவிப்பார். இந்தியாவில் வைத்து பிறிதொன்றைத் தெரிவிப்பார். ஆனால் நாங்கள் எமது நிலைப்பாட்டை தேர்தலுக்காகத் தெரிவிக்கவில்லை. எதைச் செய்யவுள்ளோமோ அதைத்தான் எமது தீர்வுத்திட்டமாகக் குறிப்பிடுகின்றோம்" என்று ரவி கருணாநாயக்க பதில் வழங்கினார். (அ-ம)

## அத்தியாவசிய....

275 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கு 35 ரூபாவால் குறைக்கப்பட்டு 240 ரூபாவாகவும், 285 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் 20 ரூபாவால் குறைக்கப்பட்டு 265 ரூபாவாகவும், 260 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கீரி சம்பா அரிசி 6 ரூபாவால் குறைக்கப்பட்டு 254 ரூபாவாகவும், 375 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ சிவப்புச்சீனி 5 ரூபாவால் குறைக்கப்பட்டு 370 ரூபாவாகவும், 258 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ வெள்ளைச் சீனி 4 ரூபாவால் குறைக்கப்பட்டு 254 ரூபாவாகவும், 290 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ சிவப்புப் பருப்பு 5 ரூபாவால் குறைக்கப்பட்டு 285 ரூபாவாகவும், ஆயிரத்து 20 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் வெள்ளைக் கௌப்பி 22 ரூபாவால் குறைக்கப்பட்டு 998 ரூபாவாகவும், 950 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் சிவப்புக் கௌப்பி 10 ரூபாவால் குறைக்கப்பட்டு 940 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (அ-ம-66)

## ஜனாதிபதி...

இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலும் கலந்துகொண்டார். இதன்போது அவரிடம், 'ஜனாதிபதித் தேர்தலில் வழமையாக பிரதானமாக இருமுனைப்போட்டியே நிலவும். இம்முறை மும்முனைப் போட்டி நிலவுகின்றது. ரணிலுக்கு வெற்றி வாய்ப்பு உள்ளதென நீங்கள் கருதுகின்றீர்களா?' என்று வினவப்பட்டது.

இதற்குப் பதில் வழங்கிய ரவிகருணாநாயக்க, "எத்தனை வேட்பாளர்கள் போட்டியிட்டாலும், வேட்பாளர்களின் எண்ணிக்கை 10, 15, 20 ஆக இருந்தாலும், எங்களைப் பொறுத்தவரையில் வெற்றி வேட்பாளராக ஒருவரே காணப்படுகின்றார். அது ஜனாதிபதி ரணில் மட்டுமே. ஏனையவர்கள் அனைவரும் 'எல்போர்ட்' வேட்பாளர்களே" என்று தெரிவித்தார்.

இதன்போது, தமிழர்கள் பகுதிகளில் பொதுவேட்பாளரின் அவசியம் தொடர்பில் பேசப்படுகின்றதே? என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் வழங்கிய ரவி கருணாநாயக்க, "தமிழர்களுக்காக ரணில் விக்கிரமசிங்க நல்ல ஆக்கபூர்வமான திட்டங்களை ஆற்றியுள்ளார். ஆதலால், தமிழர்கள் அவரை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை ஜனாதிபதி ரணிலுக்கு உள்ளது" - என்றார். (அ-ம)

## மயங்கிய...

விசாரணைகளும், வாக்குமூலத்தைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள இந்தியாவுக்கான இலங்கையின் துணைத்தூதரகத்திடமும் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ம-56-26-20)

## கடலுக்குள்...

இறப்புச் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்ய முற்பட்டபோதே இந்த விபத்துச் சம்பவித்திருந்தது. இறந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே அந்த மீனவர் தண்ணீரில் மூழ்கியதால்தான் இறப்புச் சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டமருத்துவ அதிகாரி செ.பிரணவன் இந்த உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொண்டார்.

இதேவேளை, காணாமற்போன மீனவர் நேற்று மாலைவரை மீட்கப்படவில்லை என்றும் இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது. (அ-ம-125)

## மாவிட்டபுரம்...

இன்று அதிகாலை 3.30 மணியளவில் உஷக் காலப் பூசை, அதிகாலை 4 மணியளவில் 108 சங்காபிஷேகம், அதிகாலை 5.30 மணியளவில் காலைச் சந்திப் பூசை என்பன இடம்பெறும். காலை 6.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து மாவைக் கந்தப் பெருமான் சித்திரத் தேரை நோக்கித் திருநடனத்துடன் சென்று ஆரோகணிப்பார். காலை 8.45 மணியளவில் சித்திரத் தேர் வீதி உலா ஆரம்பமாகும். முற்பகல் 11.30 மணியளவில் சித்திரத் தேர் இருப்பிடம் சென்றடையும். இன்று பி.ப. 3.30 மணியளவில் மாவைக் கந்தப் பெருமான் சித்திரத் தேரிலிருந்து அவரோகணம் செய்யும் திருக்காட்சி இடம்பெறுமென மாவை ஆதீன கர்த்தா மகாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள் தெரிவித்துள்ளார். (அ-ம-66)

## கஞ்சாவுடன்...

வவுனியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

செம்மணியில் யாழ். வளைவுக்கு அருகில் இளைஞர் ஒருவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடுவதாகப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 20 கிலோ 175 கிராம் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-66)

## துறைமுக...

ஜனாதிபதி ரணில் தெரிவித்தார். தாளையடியில் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்ட கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கில் அடுத்தசில வருடங்களில் பரந்துபட்ட அபிவிருத்திக்கு எதிர்பார்க்கின்றோம். காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய இந்தியாவுடன் கலந்தாலோசிக்கிறோம். சிமெந்து நிறுவனம் இருந்த இடத்தில் முதலீட்டு வலயமொன்று ஆரம்பிக்கப்படும். பூநகரியிலும் முதலீட்டு வலயங்கள் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசியபோது எட்டப்பட்ட உடன்பாடுகளைக் கைசாத்திடும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. பால் உற்பத்திச் செயற்பாடுகளுக்காக அமுல், கார்கில்ஸ் நிறுவனங்களுடன் ஆலோசிக்கிறோம் என்றும் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்தார். (அ-ம-26)

**சமையலாள் தேவை**

யாழ். நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக்கூடிய ஒருவர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 959 2628**

பலாலி கண்ணார்வயல்
**ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலய**
**வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்**

எதிர்வரும் 15.08.2024 வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் **பலாலி வடக்கு, அ.மி.த.க. பாடசாலையில்** ஆலய வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் நடைபெற இருப்பதால் பலாலி வாழ் பொதுமக்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**பரிபாலனசபையினர்.**

(cs 55838) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
12.10.1971

மறைவு
14.08.2023

கடந்த 14.08.2023 இல் கோப்பாய் சிக்னல் சந்தி விபத்தில் அகாலமரணமடைந்த

அமரர்

## நாவேந்தன் கௌரிமலர்

(சமுர்த்தி வங்கி முகாமையாளர் - சங்கானை
(தற்காலிகம் - கோப்பாய்)

ஆண்டொன்று ஆனபோதும் அக்கா நீண்ட நினைவுகளோடு நாம்

அன்று ஒன்றாய் ஓடி ஆடி விளையாடி மகிழ்ந்ததெல்லாம் இன்று கனவுகளாக

நெஞ்சத்தில் என்றும் நீங்காது நின்றழுத்தும் எம்மோடு நிலைத்திருக்கும் நினைவுகளாக

அடியற்ற மரம்போல உயிரான உறவு உனையிழந்து துடிதுடித்துக் கதறுகின்றோம்

கொடுங் காலன் நாம் படுந்துயர் அறியானோ சடுதியில் தன் வேலை முடித்தானோ

நொடிப்பொழுதில் மூச்சடங்க என்ன சொல்ல நினைத்தாயோ துடிதுடித்துக் கதறியழுகின்றோம்

ஆற்றவும் தேற்றவும் முடியாது தவிக்கின்றோம் சோதரியே

உன் பண்பான உன்னதமான வாழ்க்கை முறை கண்டு இறைவன் தன்
விண்ணுலகில் சேர்த்து விட்டான் (தேற்றம்)

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## கடை வாடகைக்கு

Stanly Road இல் அமைந்துள்ள 10 அடி அகலம் 36 அடி நீளம் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 077 360 9005

(CS/55827) J-1

## காணி விற்பனைக்கு

கைதடி - நவபுரம் வீதி முகப்புடன் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. ஆவணங்கள் அனைத்தும் சட்டரீதியாக 100% சரியாக உள்ளன.

- நன்னீர் வசதி உண்டு.
- சிறந்த சுற்றுச் சூழல்.
- 1 பரப்பு - 8 லட்சம் ரூபா.

விலை நேரில் பேசித்தீர்மானிக்கலாம்
மேலதிக விபரங்களுக்கு :-

076 659 0583, 077 612 2971

(CS/55818) J-1

## காணி விற்பனைக்கு

- கொழும்புத்துறை விதானையார் வீதியில்
- 2 1/2 பரப்புக் காணி 4 பக்கமும் சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு.
- 1 1/4 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும்
- சிறந்த சுற்றுச் சூழல்
- நல்ல நீர் ஊற்று
- A9 வீதி 7 நிமிடம்
- கச்சேரி 10 நிமிடம்
- சுண்டுக்குழி, சென் ஜோன்ஸ் பாடசாலைகள் 7 நிமிடம்

தரகர் தேவையில்லை.
காணி உரிமையாளர்

076 659 0583

- யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதான வீதியில் காப்பற் வீதி முகப்பு 200 அடியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- எந்தவொரு வியாபார நோக்கத்திற்கும் சிறந்த காணி.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

காணி உரிமையாளர்

076 659 0583, 070 575 8086

## ஒன்றுகூடல் நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஓக. 3

யாழ். பண்ணாகம் வடக்கு அ.மி. த.க. பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 152ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்ட ஒன்றுகூடல் நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி அபிராமி சிவபவன் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது. (ம-22-66)

## செயற்பட்டு மகிழ்வோம்

சுன்னாகம் கிழக்குச் சனசமூக நிலையத்தின் சிவன் முன்பள்ளிச் சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா சனசமூக நிலையத் தலைவர் க.கஜேந்திரன் தலைமையில் சனசமூக நிலைய மைதானத்தில் இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

(ம-22-66)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 112 பரப்புக் காணியில் 24 பரப்பு காணி மட்டுமே விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் (2 வது காணி).
- 20 அடிப்பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்.
- ஒரு பரப்பின் விலை 5 1/2 இலட்சம் (550000/=)
- தரகர் தேவையில்லை

**பார்வையிடும் நேரம்:**
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.

(CS 1043) V-1

தொடர்புகளுக்கு:
ஜெயம் 077 814 7389
077 986 5457



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org